## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

# வடலூர் வள்ளலார் பேருந்து நிலையம் அருகே தேர்தல் பிரச்சார சிறப்புரையாற்றுகிறார்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!





தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாளை (12.04.2026-ஞாயிற்றுக்கிழமை) மாலை 04.00 மணியளவில் வடலூர் வள்ளலார் பேருந்து நிலையம் எதிரில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் சார்பில் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்களையும், ஆதரித்து உதயசூரியன் சின்னத்திற்கும் கழக வேட்பாளர்கள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்கு கேட்டு பிரச்சாரத்தில் ஈடுபட உள்ளார்.

அதுசமயம் இப்பிரச்சார கூட்டத்தில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட கழக தொகுதி பார்வையாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாநகர மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டம், வார்டு, பூத் கழக இளைஞரணி மற்றும் மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி,

வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC), பூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள்(BDA), ஸ்டாலினின் மகளிர் படையினர்கள், கழக தோழர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர் - கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

---

இதுவரை ரூ.6 கோடியே 45 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 45 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 09-04-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | ஏ.ஆர்.மாரிமுத்து, இலுப்பக்கோரை, கணபதி அக்ரஹாரம் அஞ்சல், தஞ்சை | 25,000/–– |
| 2. | ப.மாரிமுத்து, காளிபாளையம், தாராபுரம், திருப்பூர் – 638 661. | 25,000/– |
| 3. | கே.பிச்சைமணி, 11வது வார்டு, ஜக்கன் தெரு, அல்லிநகரம், தேனி மாவட்டம் | 25,000/– |
| 4. | எம்.ஜார்ஜ், அம்மாபட்டி, கொடைரோடு, நிலக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டம் | 25,000/– |
| 5. | வி.ஆறுமுகம், கோவிலன்சாத்தான், மல்லல் அஞ்சல், இராமநாதபுரம் | 25,000/– |
| 6. | ஏ.ஆயிஷாகனி, பூலாங்கால் திருச்சுழி, அருப்புக்கோட்டை, விருதுநகர் | 25,000/– |
| 7. | சா.தங்கசாமி, கோட்டை தெரு, சுரண்டை, தென்காசி மாவட்டம். | 25,000/– |
| 8. | ஜெ. கலைச்செல்வி, வாகையூர் அஞ்சல், திட்டக்குடி, கடலூர் | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |

---

பெரம்பலூர் மாவட்டம் – குன்னம் சட்டமன்றத் தொகுதியில் – வேட்பாளர்

# அமைச்சர் சா.சி.சிவசங்கரை ஆதரித்து - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பரப்புரை!

பெரம்பலூர், ஏப்.11—

இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குன்னம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் டாக்டர் ஜெயலெட்சுமி ஆகியோரை ஆதரித்து, குன்னம் கடைவீதியில் பிரச்சாரம் செய்தார்,

அப்போது அவர் பேசும்போது:- தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த ஐந்தாண்டில் எண்ணற்ற நல்ல பல திட்டங்களை கொண்டு வந்துள்ளார். குறிப்பாக பெண்களுக்கு இலவச பேருந்து பயணம், மகளிர் உரிமை தொகை மற்றும் நான் முதல்வன் திட்டம், கல்லூரி படிக்கும் மாணவர்களுக்கு லேப்டாப் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை செய்துள்ளார்.



உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின், கழக வேட்பாளர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமாரை ஆதரித்து குடிமங்கலம் கிழக்கு ஒன்றியத்துக்குட்பட்ட பொன்னேரி, கோட்டமங்கலம் பகுதியில் திருப்பூர் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி உதயசூரியன் சின்னத்திற்கு சேகரித்தார். இதில் ஒன்றிய கழக செயலாளர் சா.ராஜமாணிக்கம் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

மேலும் குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு அறிவிக்கப்பட்ட அனைத்து திட்டங்களையும் முழுமையாக செய்துள்ளதாகவும் தெரிவித்தவர், தற்பொழுது குன்னம் தொகுதிக்கு கேட்கப்பட்டுள்ள அனைத்து திட்டங்களும் தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் உடனடியாக செய்து தரப்படும் என தெரிவித்தவர், எடப்பாடி பழனிச்சாமி என்னை பற்றி பல இடங்களில் அதிகமாக பேசி வருகிறார்,

அதிலும் குறிப்பாக எனக்கு அனுபவம் இல்லை என தெரிவிக்கிறார் அது உண்மைதான் அவரைப்போல எனக்கு அனுபவம் கிடையாது அவர் அ.தி.மு.க.வில் முதலில் ஜெயலலிதா காலில் விழுந்தவர், பின்பு சசிகலா காலில் விழுந்து ஆட்சியைப் பிடித்தார். அதனை தொடர்ந்து தற்போது மோடியின் காலில் விழுந்து கிடக்கிறார் என அவர் படத்துடன் காட்டி பேசியவர், எடப்பாடி போல் நான் யார் காலில் விழுந்தும் பதவிக்கு வரவில்லை, அந்த அனுபவம் எனக்கு இல்லை அவர் எப்பொழுதும் அ.தி.மு.க.வில் பொதுச் செயலாளராக நீடிக்க வேண்டும். அப்போதுதான் தி.மு.க. வெற்றி பெறும், இந்த முறை அதையும் தாண்டி அவரை வீட்டுக்கு அனுப்ப மக்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என கேட்டுக் கொண்ட அவர் தி.மு.க. தற்போது தேர்தல் வாக்குறுதியாக அறிவித்துள்ள 2000 மகளிர் உரிமைத்தொகை, 8000 த்திற்கான கூப்பன் ஆகியவைகள் குறித்து எடுத்துரைத்து பேசியவர், குன்னம் சட்டமன்ற தொகுதியில் அமைச்சராக இருந்த சிவசங்கர் அ.தி.மு.க. ஆட்சியில் ஓடிய டப்பா பேருந்துகளை அனைத்தும் புதிய பேருந்துகளாக கொண்டு வந்து தமிழகத்தை அனைத்து பகுதிகளுக்கும் பேருந்துகளை இயக்கியுள்ளார்.

ஆகவே இவரை 50 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்ட மன்ற தொகுதியில் நடைபெற்ற துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரத்தில், ஐ.ஜே.கே.கட்சி பெரம்பலூர் மாவட்ட தலைவர் ஏ.வி.ஆர். ரகுபதி தனது ஆதரவாளர்களுடன் தி.மு.க.வில் இணைந்தார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ப.உ. சண்முகம்

### ஏப்ரல் 11 (2007)



**பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரிடம் அன்பும், நட்பும் கொண்டவர். திருவண்ணாமலை நகர்மன்றத் தலைவராகவும், கலைஞர் அவர்களின் அரசில் அமைச்சராகவும், கழகத்தின் துணைப் பொதுச்செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**“தி.மு.க. வரலாற்று ஏட்டில் திருவண்ணாமலை இடைத்தேர்தல் ஓர் மகத்தான திருப்புமுனை. அந்தத் தேர்தலில் திருவண்ணாமலையிலேயே தங்கி, தேர்தல் பணியாற்றுமாறு அண்ணா அவர்கள் எனக்குக் கட்டளையிட்டிருந்தார். அந்த இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.க. வேட்பாளர் ப.உ. சண்முகம் அவர்களுக்கு ஒரு தனிச் சிறப்பும், தனிப் பெருமையும் வாய்த்தது என்றே சொல்லலாம். இடையிடையே என்னுடன் ஊடல் கொண்டாராயினும் – இறுதிவரை கொள்கைக் குன்றமெனத் திகழ்ந்த காரணத்தால் என் இதயத்தில் இடம் பெற்ற நண்பர்களில் ஒருவராகவே திகழ்ந்தவர்” என தலைவர் கலைஞர் அவர்களால் நினைவு கூரப்பட்டவர்.**

**தலைவர் கலைஞர் அவர்கள், 1993ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில், இவருக்கு ‘அண்ணா விருது’ வழங்கிச் சிறப்பித்தார்கள்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. பழனியப்பன்

### ஏப்ரல் 11 (1979)



திராவிடர் கழகத்தில் உறுப்பினராகி, கழகக் கொள்கையில் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, வளவனூர் குமாரக்குப்பம் பேரூர்க் கழக செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர். குறிப்பாக 1953ல் கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில், கல்லக்குடி ரயில் நிறுத்தும் போராட்டத்தில் பங்கேற்று, கைது செய்யப்பட்டு, ஆறுமாதம் சிறைத் தண்டனை பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**